தினமணி

## பாசனக் கால்வாய் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதாக பேளூர் பகுதி விவசாயிகள் புகார்

First Published : 10 Mar 2012 11:55:29 AM IST

சேலம், மார்ச் 9: ஆனைமடுவு அணை நீரால் பயன்பெறும் பேளூரை அடுத்த சந்திரப்பிள்ளை வலசு கிராம விவசாயிகள், பாசன வாய்க்கால் ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதாக மாவட்ட வருவாய் அலுவலரிடம் வெள்ளிக்கிழமை புகார் அளித்தனர்.
ஆனைமடுவு அணையின் தண்ணீர் புழுதிக்குட்டை, குறிச்சி, நீர்முள்ளிக்குட்டை, கோலாத்துக்கோம்பை, சந்திரப்பிள்ளை வலசு, சின்னம நாயக்கன்பாளையம் ஆகிய பகுதிகளுக்கு இடது, வலது கால்வாய்கள் மூலம் வழங்கப்படுகிறது. இதில், சந்திரப்பிள்ளை வலசுக்கு வரும் 16 கிலோ மீட்டர் நீளமுள்ள கால்வாயில் சிலர் கற்களைக் கொட்டி தனியார் நிலத்துக்கு பாதை அமைத்துள்ளதாகக் கூறப்படுகிறது. கோதுமலைக்காடு அடிவாரம் என்ற பகுதியில் உள்ள இந்த ஆக்கிரமிப்பால் கால்வாயின் மறுபகுதியில் உள்ள விவசாயிகள் பாசன நீர் கிடைக்காமல் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் அணையிலிருந்து வெள்ளிக்கிழமை தண்ணீர் திறக்கப்படுவதை அறிந்த சந்திரப்பிள்ளை வலசு, பள்ளத்தாதனூர் தெற்குக் காடு, கோதுமலைக்காடு அடிவாரம் பகுதிகளைச் சேர்ந்த 20-க்கும் மேற்பட்ட விவசாயிகள் ஆனைமடுவு அணை பகுதிக்கு திரண்டு வந்து, வருவாய் அலுவலர் பிரசன்ன வெங்கடேசனிடம் மனு அளித்தனர்.

இது குறித்து அவர்கள் கூறியது: கோதுமலைக்காடு அடிவாரப் பகுதியில் 30-க்கும் மேற்பட்ட சிறு விவசாயிகளுக்குச் சொந்தமாக சுமார் 100 ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. இந்நிலையில் கால்வாயின் குறுக்கே கற்களைக் கொட்டி அடைத்து தனியார் ஒருவர் பாதை அமைத்துள்ளார். இது குறித்து நாங்கள் கேட்டதற்கு கால்வாய் தனக்கு சொந்தமான நிலத்தின் வழியாகச் செல்வதாகக் கூறுகிறார்.

கடந்த 2 ஆண்டுகளாக ஆனைமடுவு தண்ணீர் எங்கள் பகுதிக்கு வருவதே இல்லை. இதனால் நிலம் தரிசாக மாறிவிட்டது. விவசாயம் செய்ய முடியவில்லை. தென்னை மரங்களும் காய்ந்து வருகின்றன.

இனியும் தண்ணீர் இல்லாவிட்டால் குடிநீருக்குக் கூட பல கிலோ மீட்டர் தொலைவு செல்லவேண்டிய அவல நிலை ஏற்படும்.
எனவே தனியாரால் அடைக்கப்பட்ட கால்வாய் ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்றி விவசாயிகளின் வாழ்வுக்கு மாவட்ட நிர்வாகம் வழிகாட்ட வேண்டும் என்றனர்.